**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 25 / 2021**

**வா.சா.2 – இருளப்பன்** **23.07.2025**

**குறுக்கு விசாரணை :-**

ஏற்கனவே எனது மனைவி இந்த வழக்கில் 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவரது தரப்பு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மனைவி சாட்சியம் அளிக்காமல் நான் சாட்சியம் அளிப்பதற்கு என்ன காரணம் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சுப்பையாவும் நானும் ஒரே ஊரில் தான் குடியிருந்தோம் தற்போது அவர் ஊரில் இல்லை. தற்போதும் சுப்பையா தாவா 3வது இலக்க சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.கூடுதல் நிரூபண வாக்குமூலம் எந்த சொத்திற்காக போட்டுள்ளேன் என்று எனக்கு தெரியாது. எனது மனைவி 4 லக்க சொத்துக்களுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். 2ம் பிரதிவாதி 06.05.2009ல் கிரையம் வாங்கிய விபரம் எனக்கு 2009ம் ஆண்டு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் அந்த கிரையம் பற்றி எனக்கு தெரியும். அதன்பிறகு நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்று அந்த கிரைய ஆவண நகல் பெற்று பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. 2ம்பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. நான் ஆவணங்கள் தொலைந்து போனதாக மோசடியாக சான்று பெற்று ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2009ல் சுப்பையா கிரையம் வாங்குவதற்கு முன்பு அழகு தான் 3வது லக்க சொத்தில் குடியிருந்தார் என்றால் சரிதான். தாவா 3வது லக்க சொத்திற்கு பட்டா அழகு

பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான் கூட்டுப் பட்டாவாக உள்ளது. கூட்டுப்பட்டா வீரணக்கோனார் அழகு கோனார் கிருஷ்ண கோனார் ஆகியோர் பெயரில் உள்ளது. நத்தம் சர்வேயில் கூட்டுப்பட்டா தனிப்பட்டாவாக மாறியுள்ளது என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. நான் வாதியில்லை என்பதால் வாதி ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ள நிலையில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கமுடியாது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை